

தூத்துக்குடி வடக்கு மாவட்ட தி.மு.க. செயலாளர் முன்னாள் அமைச்சர் திருமதி.பி.கீதாஜீவன் அவர்கள் கோவில்பட்டி சௌபாக்யா மஹாலில் நடைபெற்ற, வெள்ளபாண்டி – ராஜலட்சுமி (நகர தி.மு.க. மகளிர் தொண்டரணி துணை அமைப்பாளர்) இல்லத் திருமண விழாவில் கலந்து கொண்டு, மணமக்கள் விக்னேஷ் – தர்ஷினி இணையருக்கு வாழ்த்துகளைத் தெரிவித்தார். உடன் கோவில்பட்டி சட்டமன்ற உறுப்பினர் கா.கருணாநிதி மற்றும் நகர கழக நிர்வாகிகள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



கடலூரில் வேளாங்கண்ணி மாதா கோவில் கொடியேற்று விழாவிற்கு பாதயாத்திரை செல்லும் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி டாக்டர் பிரவீன் ஐயப்பன் ஏற்பாட்டின் பேரில் நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு முன்னாள் கடலூர் சட்டமன்ற உறுப்பினர் கோ.ஐயப்பன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு ஆயிரம் பேருக்கு அன்னதானம் வழங்கினார். நிகழ்ச்சியில் முன்னாள் கூட்டுறவு சங்க தலைவர்கள் ஆதி பெருமாள் ரவிச்சந்திரன், தொழிலதிபர் சித்ராலயா ரவிச்சந்திரன், மாநகராட்சி கவுன்சிலர்கள் சுமதி ரங்கநாதன், மகேஸ்வரி விஜயகுமார், லயன்ஸ் சங்க நிர்வாகிகள் விஜயன், சண்முகம் மற்றும் சிவக்குமார், ராம்குமார், விஜயன், எல்.ஐ.சி.வேணு, சிவக்குமார், அருண், ராஜேஷ், கோபிநாத் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### பால் கொள்முதல் விலையை அரசு உயர்த்தி வழங்க வலியுறுத்தி – திருச்சி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில்

# பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம்!

திருச்சி, ஆக. 25 –

பால் கொள்முதல் விலையை தமிழ்நாடு அரசு உயர்த்தி வழங்க வலியுறுத்தி பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர்.

திருச்சி, பல்லடம், ஊத்தங்கரை ஆகிய இடங்களில் பால் உற்பத்தியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர். கால்நடைகளுக்கான தீவனங்களின் விலை உயர்ந்துவிட்டது. மேலும், கால்நடை பராமரிப்புச் செலவு, தவிடு, புண்ணாக்கு, தீவனப் புல் உள்ளிட்டவற்றின் விலையும் அதிகரித்துள்ளது. இதனால் பால் உற்பத்திக்கான செலவு உயர்ந்துள்ளது. எனவே, பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க வேண்டும் என அவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். விவசாயிகள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சட்டமன்றத்தில் முதலமைச்சர் விஜய் பால் கொள்முதல் விலையை லிட்டருக்கு ரூ.3 மட்டுமே உயர்த்தியுள்ளார். இது கட்டுப்படியாகாது எனத் தெரிவித்து, கொள்முதல் விலையை கூடுதலாக உயர்த்தி வழங்க வலியுறுத்தி, பால் உற்பத்தியாளர்கள் இன்று முதல் பால் வழங்கும் போராட்டத்தைத் தொடங்கியுள்ளனர். சேலம் மாவட்டத்தில் ஆவின் பால் நிறுவனத்தின் கீழ் 800க்கும் மேற்பட்ட பால் கூட்டுறவு சங்கங்கள் செயல்படுகின்றன.

பால் கூட்டுறவு சங்கங்களுக்கு வழங்கி வந்த பால் விநியோகத்தை நிறுத்திவிட்டு, உற்பத்தியாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் கூட்டுறவு சங்கங்களின் நுழைவாயிலை மறித்து, பால் கேன்களுடன் பால் வழங்காமல் முற்றுகைப் போராட்டம் நடத்தி வருகின்றனர்.

# வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. அவசர செயற்குழுக் கூட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. அறிவிப்பு!



வேலூர், ஆக. 25 -

வேலூர் வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் டி.எம். கதிர் ஆனந்த் எம்.பி. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க அவசர செயற்குழுக் கூட்டம்நாளை(26.08.2026 புதன்க்கிழமை) காலை 10.00 மணியளவில் மாவட்டப் பொருளாளர் .சி.நரசிம்மன் தலைமையில் காட்பாடி எஸ்.ஏ.மஹால், ஆக்ஸிலியம் கல்லூரி, ரவுண்டானா அருகில் நடைப்பெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கீழே குறிப்பிட்டுள்ள பொருள் குறித்து விவாதிக்கப்பட உள்ளது.

எனவே, வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க விற்குட்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாநில, மாவட்ட, மாநகர நிர்வாகிகள், ஒன்றிய, பகுதி, பேரூர் கழக செயலாளர்கள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**பொருள்:**

1. 22.08.2026 அன்று கழக தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற தலைமைச் செயற்குழு கூட்டத்தில் இயற்றப்பட்ட தீர்மானங்கள் வேலூர் வடக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் நிறைவேற்றி தருதல் குறித்து.

2. முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு வருகின்ற 29.08.2026 அன்று மாபெரும் பொதுக்கூட்டம் சிறப்புரை கழக அமைப்பு செயலாளர் அவர்கள்.

3. கழக ஆக்கப்பணிகள்.

இவ்வாறு டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி. தெரிவித்துள்ளார்.

### பேராவூரணி தொகுதியில் – சீதாம்பாள்புரம், பாதரங்கோட்டையில்

# 110 கி.வா. துணை மின் நிலையங்கள் அமைத்துத் தாரீர்!

### சட்டப் பேரவையில் – என்.அசோக் குமார் எம்.எல்.ஏ. கோரிக்கை!



சென்னை, ஆக. 25 -

சட்டப் பேரவையில், பேராவூரணி தொகுதி கழக உறுப்பினர் என்.அசோக் குமார், எழுப்பிய கோரிக் கைகள் வருமாறு:

தஞ்சாவூர் மாவட்டம், பேராவூரணி தொகுதியில் குறைந்த மின்னழுத்த மின்சாரம்தான் கிடைக்கிறது.

விவசாயிகள் குறைதீர்க்க குறிச்சி, சீதாம்பாள் புரம் 110 KV துணைமின் நிலையம் அமைத்துத் தருமாறு, திருவோணம் ஒன்றியம், பாதரங்கோட்டையில் 110 KV துணை மின் நிலையம் அமைத்துத் தருமாறும் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பேராவூரணிக்கென்று செயற்பொறியாளர் அலுவலகம் EE office அமைத்துத் தருமாறு கேட்டுக் கொள்கின்றேன். நீதிமன்றம் அங்கே வாடகைக் கட்டடத்தில் இயங்கு கின்றது. அதற்கு ஒரு சொந்தக் கட்டடம் கட்டித் தர வேண்டும்.

திருச்சிற்றம்பலத்தில் முத்து மாரியம்மன், சிவன் கோயிலுக்கு திராவிட மாடல் ஆட்சியில் ஒரு கோடியே 30 இலட்சம் ரூபாயை, கோயிலைச் சீரமைப்பதற்காக கொடுத்திருந்தார்கள். அந்த நிதி போதவில்லை. அப்பணிகளை முடிக்க மேலும் ஒரு கோடி ரூபாய்க்குமேல் தேவைப்படுகிறது. நீங்கள் ஆய்வு செய்து, அதற்குரிய தொகையைத் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

### ஆவணங்களைச் சமர்ப்பிக்க வரும் 31ஆம் தேதி வரை அவகாசம்:

# காஸ் சிலிண்டர் ‘இ-கே.ஒய்.சி.’ காலக்கெடு நீட்டிப்பு!

## வீட்டில் இருந்தே பதிவு செய்யலாம்!

சென்னை, ஆக. 25-

வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் வாடிக்கையாளர்கள் இகே.ஒய்.சி. சரிபார்ப்பை மேற்கொள்வதற்கான காலக்கெடு மீண்டும் நீட்டிக்கப்பட்டுள்ளது. இந்தியன் ஆயில், பாரத் பெட்ரோலியம், இந்துஸ்தான் பெட்ரோலியம் ஆகிய பொதுத்துறை எண்ணெய் நிறுவனங்கள் மூலம் சுமார் 2.40 கோடி வீட்டு எரிவாயு இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன.

உண்மையான பயனாளிகளுக்கு மட்டுமே எல்பிஜி மானியம் மற்றும் சலுகைகள் சென்றடைவதை உறுதி செய்யவும், போலி அல்லது முறைகேடான இணைப்புகளை கண்டறியவும் ஆதார் அடிப்படையிலான இகே.ஒய்.சி. நடைமுறை மேற்கொள்ளப்படுகிறது. ஒன்றிய பெட்ரோலிய அமைச்சகத்தின் அறிவுறுத்தலின்படி, சிலிண்டர் விநியோகிக்கும் போதே டெலிவரி ஊழியர் மூலம் வீட்டில் வைத்து முகத்தை ஸ்கேன் செய்தும் இகே.ஒய்.சி செய்யும் வசதி உள்ளது.

எரிவாயு நிறுவனங்கள் மற்றும் பெட்ரோலியத் துறை அமைச்சகத்தின் சார்பில் நடத்தப்பட்ட ஆய்வில் மாதம் ஒன்றுக்கு 25 லட்சத்திற்கும் அதிகமான வீட்டு உபயோக சமையல் எரிவாயு சிலிண்டர் இணைப்புகள் தவறாக பயன்படுத்தப்படுவதாக சந்தேகம் எழுந்தது. தமிழகத்தில் ஏராளமான வாடிக்கையாளர்கள் ஏற்கனவே இகே.ஒய்.சி செய்து முடித்துள்ள நிலையில், இன்னும் பதிவு செய்யாதவர்களுக்கு கூடுதல் அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இதனால் இன்று முதல் சிலிண்டர் கிடைக்காது என்ற அச்சம் தேவையில்லை. இருப்பினும், இகே.ஒய்.சி செய்யாமல் நீண்ட காலம் இருப்பதால் வீட்டு உபயோக விலையில் சிலிண்டர் பெறுவதில் சிக்கல் ஏற்பட வாய்ப்பு உள்ளதாக எண்ணெய் நிறுவனங்கள் எச்சரித்துள்ளன. இகே.ஒய்.சி செய்வதற்காக எரிவாயு அலுவலகத்துக்கு நேரில் செல்ல வேண்டிய அவசியமில்லை.

சம்பந்தப்பட்ட எண்ணெய் நிறுவனத்தின் செயலி அல்லது அங்கீகரிக்கப்பட்ட முறையில் வீட்டில் இருந்தபடியே சரிபார்ப்பை மேற்கொள்ளலாம். சிலிண்டர் விநியோகிக்கும் ஊழியர் மூலமாகவும் இகே.ஒய்.சி செய்து கொள்ள முடியும். மேலும், எல்.பி.ஜி. சிலிண்டர் முன்பதிவு தொடர்பாக பரவும் தகவல்களில் மக்கள் குழப்பமடைய வேண்டாம். ஒன்றிய அரசின் அதிகாரப்பூர்வ விளக்கத்தின்படி, நகர்ப்புறங்களில் 25 நாட்களுக்கு ஒருமுறையும், கிராமப்புறங்களில் 45 நாட்களுக்கு ஒருமுறையும் சிலிண்டர் முன்பதிவு செய்யும் நடைமுறை உள்ளது.

தேவையற்ற பதற்ற முன்பதிவை தவிர்க்குமாறும் ஒன்றிய அரசு அறிவுறுத்தியுள்ளது. எனவே, இதுவரை இ-கே.ஒய்.சி செய்யாத எல்.பி.ஜி. வாடிக்கையாளர்கள் தற்போது வழங்கப்பட்டுள்ள கூடுதல் அவகாசத்தை பயன்படுத்தி, வரும் 31ம் தேதிக்குள் ஆவணங்கள் சரிபார்ப்பை முடித்துக் கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

### கடற்கரை – செங்கல்பட்டு வழித்தடத்தில்

# இன்று முதல் 25 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம்!

சென்னை, ஆக. 25 -

எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணி காரணமாக, 25 மின்சார ரயில்களின் சேவையில் இன்று (ஆக.25) முதல் செப்.6ம் தேதி வரை மாற்றம் செய்யப்படவுள்ளது.

**அதன் விவரம்**: சென்னை கடற்கரை தாம்பரத்துக்கு இன்று (ஆக.25) முதல் செப்.5ம் தேதி வரை (வார நாட்களில் மட்டும்) இரவு 10.20, 11.20, 11.40, 11.59 ஆகிய நேரங்களில் இயக்கப் படும் மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட உள்ளன.

திருமால்பூர் - சென்னை கடற்கரைக்கு மேற்படி தேதிகளில் இரவு 8 மணிக்கு புறப்படும் மின்சார ரயில், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளது.

கூடுவாஞ்சேரி - சென்னை கடற்கரைக்கு இரவு 10.15, 11.20 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் மின்சார ரயில்கள், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்படவுள்ளன.

செங்கல்பட்டு-ென்னை கடற்கரைக்கு மேற்படி தேதிகளில் இரவு 10.20, 11.00 ஆகிய நேரங்களில் புறப்படும் மின்சார ரயில்கள், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளன.

**நேரம் மாற்றம்!**

சென்னை கடற்கரை - கூடுவாஞ்சேரிக்கு மேற்படி தேதிகளில் இரவு 9.45 மணிக்கு பதிலாக, 5 நிமிடம் தாமதமாக இரவு 9.50 மணிக்கு புறப்படும்.

சென்னை கடற்கரை - செங்கல்பட்டுக்கு மேற்படி தேதிகளில் இரவு 10.20 மணிக்கு பதிலாக, 5 நிமிடம் முன்னதாக, இரவு 10.15 மணிக்கு புறப்படும்.

சென்னை கடற்கரை - செங்கல்பட்டுக்கு ஆக.26 முதல் செப்.7ம் தேதி வரை (வார நாட்களில்) புறப்பட வேண்டிய மின்சார ரயில், கடற்கரை - தாம்பரம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.

ஆக.30ம் தேதி முதல் செப்.6ம் தேதி வரை ஞாயிற்றுக்கிழமைகளில், சென்னை கடற்கரை -தாம்பரம் வரை 4 மின்சார ரயில்களும், தாம்பரம் - சென்னை கடற்கரை வரை 2 மின்சார ரயில்களும், திருமால்பூர் - சென்னை கடற்கரை வரை ஒரு மின்சார ரயிலும் ரத்து செய்யப்பட உள்ளன.

இதுதவிர 6 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளன. இத்தகவலை சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.

### மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில்

# அத்தியாவசியப் பொருட்கள் விலை கடும் உயர்வு!

### தேனி மாவட்ட மக்கள் கடும் அவதி!

தேனி, ஆக. 25 -

மைனாரிட்டி த.வெ.க. ஆட்சியில் அத்தியாவசிய பொருட்களின் விலை கடுமையாக உயர்ந்துள்ளதால் தேனி மாவட்ட மக்கள் கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

தேனி மாவட்டம் முழுவதும் மைனாரிட்டி த.வெ.க. ஆட்சி வந்தவுடன் கடந்த சில வாரங்களாக டீ காபி அரிசி, சீனி, பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், பால் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

குறிப்பாக ஏழை, நடுத்தர குடும்பங்கள் தினமும் பயன்படுத்தும் பொருட்களான:

அரிசி கிலோவுக்கு ரூ.10 முதல் ரூ.15 வரை உயர்வு

பருப்பு வகைகள், சமையல் எண்ணெய், பால் ஆகியவற்றின் விலையும் கணிசமாக அதிகரித்துள்ளது.

இதனால் சந்தைக்கு செல்லும் பொதுமக்கள் கையில் பணம் இருந்தும் தேவையான பொருட்களை வாங்க முடியாமல் திணறி வருகின்றனர்.

வருமானம் உயரவில்லை, ஆனால் செலவுகள் மட்டும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது. ஒரு வேளை சாப்பாட்டுக்கே திண்டாட வேண்டிய நிலை உள்ளது” என தேனி பகுதி இல்லத்தரசிகள் மற்றும் பொதுமக்கள் வேதனை தெரிவித்தனர்.

எனவே தமிழக அரசு உடனடியாக தலையிட்டு அத்தியாவசிய பொருட்களின் விலையை கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரேஷன் கடைகளில் பொருட்களை தடையின்றி வழங்குவதோடு, விலைவாசி உயர்வை கட்டுப்படுத்த வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# விவேக குருவும் பரமார்த்த சீடர்களும்!



ஒருவர்
கர்மவீரரை
காமவீரர்
என்கிறார்...

மற்றொருவர்

மனமார்ந்த
நன்றியை
மன்மத
நன்றியாக்குகிறார்...

நிதி
அமைச்சரோ
"நாற்பதாயிரத்து நாற்பத்தி
பனிரெண்டு"
என்கிறார்..

தொழிலாளர் நலத்துறை
அமைச்சரோ

"ஒரு லட்சத்து
ஒரு கோடியே
நூறு கோடி"
என்கிறார்...

ஆஹா இப்படி

"மட்டி
மடையன்
பேதை
மிலேச்சன்
மூடன் என்கிற
மேற்படி
பரமார்த்த
சீடர்களின்

விவேக
குருவான
முதலமைச்சரோ


"ஐயாயிரத்து தொன்னூற்று
முப்பத்திரண்டு
கோடி" என்கிறார்...

அது சரி

"இங்கிவரை
யாம் பெறவே
என்ன தவம்
செய்து விட்டோம்"
என்றே

புல்லரித்து
நிற்கிறது
இந்த
புறநானூற்றுத்
தமிழகம்...

என்னநாஞ் சொல்றது



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித்
தொடர்புக் குழு
துணைத் தலைவர்